"(கடன்பெறுநர்களான) கடவத்தையைச் சேர்ந்தவர்களும், 1991, ஓகத்து 29 ஆந் திகதிய டபிள்யூ. 8299 ஆம் இலக்கச் சான்றிதழின்கீழ் மேல் மாகாணத்துக்கான வியாபாரப் பெயர்களுடன் பதிவுசெய்யப்பட்ட மேலேயுள்ள முகவரியில் மெக்கனிக்கல் வுட்வேக்கர்ஸ் என்ற பெயர் மகுடத்தின் கீழும் பங்காண்மையின் தொழில் கொண்டு நடாத்துகின்றவர்களுமான முனசிங்க தேவகே ஷாந்த குமார முனசிங்க மற்றும் முனசிங்க தேவகே சர்னேலிஸ் என்போர், முன்னை நாள் இலங்கைத் தேசிய அபிவிருத்திவங்கியாகவிருந்து இப்போதுள்ள (வங்கியான) தேசிய அபிவிருத்தி வங்கி லிமிற்றெற் தாபனத்தின் சார்பில் கம்பஹாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு வை. எஸ். டபிள்யூ. ஜயசுந்தர அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2001.09.01 ஆந் திகதிய 194 ஆம் இலக்க முறிமீது வருமதியான கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளராதலாலும், அத்துடன் கீழே விவரிக்கப்பட்ட ஆதனத்தினதும் வளவுகளினதும் இறையிலிச் சொந்தக்காரர், அதாவது, முனசிங்க தேவகே சர்னேலிஸ் என்பவர், சொல்லப்பட்ட முறியின்கீழ் தனது இறையிலி உரிமையையும், உரித்தையும், அக்கறையையும் வங்கிக்கு வருமதியாக ஈடுவைத்துள்ளாராதலாலும், அத்துடன் 2006 ஒற்றோபர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக இரண்டு இலட்சத்து அறுபதாயிரத்து இருநூற்றைம்பத்தி மூன்று ரூபா அறுபத்தெட்டுச் சதம் (ரூ. 2,60,253.68) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறிமீது 2006, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக வங்கிக்கு வந்துள்ளதாதலாலும், வங்கியின் பணிப்பாளர் சபையானது. 1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க. வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (பிரதான சட்டமான) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் தமக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் செயற்பட்டு, சொல்லப்பட்ட பணத்தொகையான இரண்டு இலட்சத்து அறுபதாயிரத்து இருநூற்றைம்பத்தி மூன்று ரூபா அறுபத்தெட்டுச் சதம் (ரூபா 2,60,253.68) கொண்ட தொகையை அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும், சொல்லப்பட்ட முறிமீது வருமதியான கூட்டுமொத்த முதல் தொகையான இரண்டு இலட்சத்து முப்பதினாயிரத்து முந்நூற்றியிருப்பத்தாறு ரூபா பதினொரு சதம் (ரூபா 2,30,326.11) கொண்ட தொகைமீது 2006, நவெம்பர் 1 ஆந் நாள் தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்குப் பதினொன்று தசம் ஐந்து வீதப்படி (11.5%) வருமதியான வட்டியையும், அதன் பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, பிரதான சட்டத்தின் 13 ஆம் ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட முறிமூலம் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்ட ஆதனத்துக்கும் வளவுகளுக்குமான இறையிலி மற்றும் வேறு உரிமை, உரித்து அத்துடன் அக்கறை என்பன உத்தரவுபெற்ற ஏலதாரரான திரு. பீ. கே. ஈ. சேனாதிபதி அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

#### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், நீர்கொழும்பு மாவட்டத்தில் ஹாபிட்டிகம கோறளையிலுள்ள யட்டிகஹாபத்துவில் முன்னர் கல்எலியவின தாகவிருந்த மல்லஹேவ கிராமத்தில் அமைந்துள்ளதும், பண்டாரவத்த மறுபெயர் கஹட்டகஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நில அளவையாளரான டபிள்யூ. பீ. எஸ். விக்ரமசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2001.01.23 ஆந் திகதிய 1212 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 எனக் குறித்துக் காட்டப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு : வடக்கில் : வீதி ; கிழக்கில் : வீதியும் காணித்துண்டம் 2 உம், எம். ஏ. சந்திரசோம என்பவரின் காணியும் ; தெற்கில் : காணித்துண்டம் 2 உம், எம். ஏ. சந்திரசோம என்பவரினதும், ஏ. எச். என். பீ. கோமஸ் என்பவரினதும் காணிகள் மற்றும் ; மேற்கில் : ஏ. எச். என். பீ. கோமஸ் என்பவரின் காணி ; பரப்பளவில் இது, ஒரு றூட்டை (0ஏ.1றூ.0பே.)

கொண்டுள்ளதுடன், நீர்கொழும்புக் காணிப் பதிவகத்தில் தொகுதி / பக்கம் டீ 305 / 231 என்பதில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

பணிப்பாளர்/பொது முகாமையாளர்,
தேசிய அபிவிருத்தி வங்கி லிமிட்டெட்.

12-806/3

---

### 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

"பெல்வத்த டிஸ்டிலரீஸ் (பிறைவட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 373 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 1993.03.16 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "பெல்வத்த டிஸ்டிலரீஸ் (பிறைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்பமுடிகிறது.

1982 ஆம் ஆண்டின் 171 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 373(3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளராகிய டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான் இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "பெல்வத்த டிஸ்டிலரீஸ் (பிறைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடா தென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகின்றேன்.

டி. கே. ஹெற்றியாரச்சி,
கம்பனிகள் பதிவாளர்.

என்(பீவீஎஸ்) 10724
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10.
27, நவெம்பர் 2006.

12-757

---

### தேசிய அபிவிருத்தி வங்கி லிமிட்டெட்

திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

2006, நவெம்பர் 13 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி லிமிட்டெட் தாபனத்தினது பணிப்பாளர் சபையின் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறை வேற்றப்பட்டது :-

"(கடன்பெறுநரான) எஹெலியாகொடவைச் சேர்ந்தவரும் 2003.07.18 ஆந் திகதிய ஆர்/ஹெலி/00988 ஆம் இலக்கத்தைக் கொண்ட சான்றிதழின்கீழ் சப்ரகமுவ மாகாணசபையுடன் பதிவுசெய்யப்பட்ட "விஷாகாஸ் கார்மன்ட்" என்ற பெயர் மகுடத்தின்கீழ் தனி உரிமையாண்மையில் தொழில் கொண்டு நடாத்துகின்றவருமான எதிரிசிங்க முதியான்சலாகே சிறிவர்த்தன பண்டார என்பவர், முன்னைநாள் இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கியாகவிருந்து இப்போதுள்ள (வங்கியான) தேசிய அபிவிருத்தி வங்கி லிமிட்டெட் தாபனத்தின் சார்பில் இரத்தினபுரியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எச். எம். ஜீ. திசாநாயக்க அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004.06.25 ஆந் திகதிய 99 ஆம் இலக்க ஈட்டுமுறிமீது வருமதியான கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராத லாலும், அத்துடன் 2006, ஒற்றோபர் 1 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஏழு இலட்சத்து ஓராயிரத்து அறுநூற்றியெண்பத்தொரு ரூபா எண்பத்திநான்கு சதம் (ரூபா 7,01,681.84) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறிமீது 2006, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்றுள்ள வாறாக வங்கிக்கு வருமதியாக வந்துள்ளதாதலாலும், வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (பிரதான சட்டமான) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் தமக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் செயற்பட்டு, சொல்லப்பட்ட பணத்தொகையான ஏழு இலட்சத்து ஓராயிரத்து அறுநூற்றியெண்பத்தொரு ரூபா எண்பத்திநான்கு சதம் (ரூபா 7,01,681.84) கொண்ட தொகையை அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும், சொல்லப்பட்ட முறிமீது வருமதியான கூட்டுமொத்த முதல் தொகையான ஐந்து இலட்சத்து ஐம்பத்தையாயிரத்து முந்நூற்றித் தொண்ணூற்றெட்டு ரூபா முப்பத்தைந்து சதம் (ரூபா 5,55,398.35) கொண்ட தொகைமீது 2006, நவெம்பர் 1 ஆந் நாள் தொடக்கம் விற்பனைத் தேதிவரை ஆண்டொன்றுக்குப் பதினேழு வீதப்படி (17%) வருமதியான வட்டியையும், அதன்பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, பிரதான சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட முறிமூலம் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் உத்தரவுபெற்ற ஏலதாரரான திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

#### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

சபிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்திலுள்ள பணவெல் மேற்குக் கோறளையின் மஹர கிராமத்தில் அமைந்துள்ளதும், அதன்மீதுள்ள கட்டிடத்துடனும் மரங்களுடனும் பயிர்களுடனும் மற்றெல்லாவற்றுடனும் சேர்த்து, மஹர அஸ்கங்குல ஜீ. டபிள்யூ. டீ. வீதியினால் தனிவேறாக்கப்பட்ட குறுந்து கொட்டுவ மறுபெயர் வளவ்வே வத்தவின் தென்பாகம் எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளரான சிறி பீ. அளவத்துற என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1990.08.26 ஆந் திகதிய 621 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1 எனக் குறியிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது - வடக்கில் : வீதி ; கிழக்கில்: தொலொஸ்லஹா மற்றும் விசிலஹா ; தெற்கில் : விசிலஹவும் 621 ஆம் வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 2 உம்; மற்றும் மேற்கில் : காணித்துண்டம் 2 உம் வீதியும் பரப்பளவில் இது, பதினாறு தசம்

ஐந்து இரண்டு பேர்ச்சுக்களை (0ஏ.0றூ.16.52பே.) கொண்டுள்ளதுடன், சொல்லப்பட்ட காணிக்கான பாதையுரிமையுடன் சேர்த்து அவிசாவளைக் காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஆர் 67/273 என்பதில் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

மேற்கூறப்பட்டவாறு அமைந்துள்ள மேற்கூறப்பட்ட குறுந்து கொட்டுவ மறுபெயர் வளவ்வே வத்தவின் தென்பாகம் எனவழைக்கப்படும் காணியினதாய் மேற்கூறப்பட்ட 621 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 2 எனக் குறியிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அத்துடன் சொல்லப்பட்ட காணித்துண்டம் 2, பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது - வடக்கில் : வீதியும் 621 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 1 உம் ; கிழக்கில் : விசிலஹாவும் 621 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 1 உம் ; தெற்கில் : விசிலஹாவும் ஒற்றையடிப் பாதையும்; மற்றும் மேற்கில் : ஒற்றையடிப்பாதை ; பரப்பளவில் இது, ஒரு றூட் இருபத்திரெண்டு தசம் இரண்டு ஒன்று பேர்ச்சுகளை (0ஏ.1றூ. 22.21பே.) கொண்டுள்ளதுடன், சொல்லப்பட்ட காணிக்கான பாதையுரிமையுடன் சேர்த்து அவிசாவலைக் காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஆர் 71/226 என்பதில் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

பணிப்பாளர்/பொதுமுகாமையாளர்,
தேசிய அபிவிருத்தி வங்கி லிமிட்டெட்.

12-807/1

---

## தேசிய அபிவிருத்தி வங்கி லிமிட்டெட்

*திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

2006, நவெம்பர் 13 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி லிமிட்டெட் தாபனத்தினது பணிப்பாளர் சபையின் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது :-

"(கடன்பெறுநரான) கேகால்லையைச் சேர்ந்தவரும், விக்ரம இன்டஸ்றீஸ் என்ற பெயர்மகுடத்தின்கீழும் குழுமத்தின்கீழும் தனி உரிமையாண்மையில் தொழில் கொண்டுநடாத்துகின்றவருமான அஜித் விக்ரமசிறி குணசேக்கர என்பவர், முன்னைநாள் இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கியாகவிருந்து இப்போதுள்ள (வங்கியான) தேசிய அபிவிருத்தி வங்கி லிமிட்டெட் தாபனத்தின் சார்பில் கேகல்லையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு (திருவாட்டி) ஆர். எம். எம். என். கே. ரத்நாயக்க அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2000.06.01 ஆந் திகதிய 246 ஆம் இலக்க மற்றும் 2003.07.10 ஆந் திகதிய 731 ஆம் இலக்க ஈட்டுமுறிகள்மீது வருமதியான கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும், அத்துடன் 2006, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக முப்பத்திநான்கு இலட்சத்து முப்பத்தையாயிரத்துத் தொண்ணூற்றொன்பது ரூபா முப்பத்தைந்து சதம் (ரூபா 34,35,099.35) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறிமீது 2006, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக வங்கிக்கு வருமதியாக வந்துள்ளதாதலாலும், வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (பிரதான சட்டமான) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் தமக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் செயற்பட்டு, சொல்லப்பட்ட பணத்தொகையான முப்பத்துநான்கு இலட்சத்து முப்பத்தையாயிரத்துத் தொண்ணூற்றொன்பது ரூபா முப்பத்தைந்து சதம் (ரூபா 34,35,099.35) கொண்ட தொகையை அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும், சொல்லப்பட்ட முறிகள்மீது வருமதியான கூட்டுமொத்த முதல் தொகையான இருபத்தெட்டு இலட்சத்து முப்பதினாயிரத்து அறுநூற்றெழுபத்தாறு ரூபா ஐம்பத்தைந்து சதம் (ரூபா 28,30,676.55) கொண்ட தொகைமீது 2006, நவெம்பர் 1 ஆந் நாள் தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு பதினெட்டு வீதப்படி (18%) வருமதியான வட்டியையும், அதன்பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, பிரதான சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச்செலவுகள், விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட முறிகள்மூலம் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் உத்தரவுபெற்ற ஏலதாரரான திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

சப்ரகமுவ மாகாணம், கேகால்லை மாவட்டத்திலுள்ள கினிகொட கோறளையின் தெயல தஹமுன பத்துவின் கேகால்லை பட்டினசபை எல்லைகளில் நாகொல்லை வீதி வழியாக அமைந்துள்ள மாதெய்யாவவில் அமைந்துள்ளதும், நாகொல்ல வத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளரான லக்ஷ்மன் குணசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1994.04.15 ஆந் திகதிய 480 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 05 எனக் குறியிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும். அதன் எல்லைகள் பின்வருமாறு : வடக்கில் : கேகால்லை நில்வக்க வீதி ; கிழக்கில் : சொல்லப்பட்ட வரைபடத்தின் காணித்துண்டம் 06 உம் 20 அடி வீதியும் ; தெற்கில் : சொல்லப்பட்ட வரைபடத்தின் காணித்துண்டம் 06; மற்றும் மேற்கில் : சொல்லப்பட்ட காணியின் காணித்துண்டம் 04 பரப்பளவில் இது, இவ்வெல்லைகளினுள் 2 றூட்களை (0ஏ.2றூ.0பே.) கொண்டுள்ளதுடன், அதன்மீதுள்ள மரங்களுடனும் பயிர்களுடனும் கட்டிடங்களுடனும் அத்துடன்/அல்லது அதனோடு நிரந்தரமாக இணைக்கப்பட்டுள்ள அல்லது பொருத்தப்பட்டுள்ள வேறு பொருட்களுடனும் சேர்த்து, கேகால்லை, நாகொல்ல வீதியில், 124 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ளது ; கேகால்லைக் காணிப் பதிவகத்தில் தொகுதி /பக்கம் பீ 383/138 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்/பொதுமுகாமையாளர்,
தேசிய அபிவிருத்தி வங்கி லிமிட்டெட்.

12-807/2

## தேசிய அபிவிருத்தி வங்கி லிமிட்டெட்

*திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

2006, நவெம்பர் 13 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி லிமிட்டெட் தாபனத்தினது பணிப்பாளர் சபையின் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப் பட்டது :-

"(கடன்பெறுநரான) கேகால்லையைச் சேர்ந்தவரும், "விக்ரம இன்டஸ்றீஸ்" என்ற பெயர்மகுடத்தின்கீழும் குழுமத்தின்கீழும் தனி உரிமையாண்மையில் தொழில் கொண்டுநடாத்துகின்றவருமான அஜித் விக்ரமசிறி குணசேக்கர என்பவர், முன்னைநாள் இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கியாகவிருந்து இப்போதுள்ள (வங்கியான) தேசிய அபிவிருத்தி வங்கி லிமிட்டெட் தாபனத்தின் சார்பில் கேகால்லையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு (திருவாட்டி) ஆர். எம். எம். என். கே. ரத்நாயக்க அவர்களினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2001.04.10 ஆந் திகதிய 379 ஆம் இலக்க ஈட்டுமுறிமீது வருமதியான கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும், அத்துடன் 2006, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஒரு இலட்சத்து எட்டாயிரத்து முந்நூற்றித் தொண்ணூற்றாறு ரூபா பத்து சதம் (ரூபா 1,08,396.10) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறிமீது 2006, ஒற்றோபர் 31 ஆந் திகதியின்றுள்ளவாறாக வங்கிக்கு வருமதியாக வந்துள்ள தாதலாலும், வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (பிரதான சட்டமான) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் தமக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் செயற்பட்டு, சொல்லப்பட்ட பணத்தொகையான ஒரு இலட்சத்து எட்டாயிரத்து முந்நூற்றித் தொண்ணூற்றாறு ரூபா பத்து சதம் (ரூபா 1,08,396.10) கொண்ட தொகையை அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும், சொல்லப்பட்ட முறிமீது வருமதியான கூட்டுமொத்த முதல் தொகையான தொண்ணூற்றிரண்டாயிரத்து இருபத்தியொரு ரூபா ஐந்து சதம் (92,021.05) கொண்ட தொகைமீது 2006, நவெம்பர் 1 ஆந் நாள் தொடக்கம் விற்பனைத் தேதிவரை ஆண்டொன்றுக்குப் பதினெட்டு வீதப்படி (18%) வருமதியான வட்டியையும், அதன்பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, பிரதான சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட முறிமூலம் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்ட அசைவுள்ள ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரரான திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### மேலே குறிப்பிடு செய்யப்பட்ட ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

சன்ஷு பல்வகை உலர்த்தி தொகை 01, "எபிரா" 06 புளொவர் கொள்வனவு (டபிள்யூ) 650 இன் மாதிரி எஸ்பீ 60ஏ மற்றும் கொள்ளளவு (கிகி) 300 - 400 இல. எரிகருவி வகை ஜீபீ 202பீ எரிபொருள் பயன்படுத்தப்படவேண்டும். மண்ணெண்ணெய் எரிபொருட் பாவனை (1/எச்) 7.6 கட்டுப்பாட்டுக்கூறு தன்னியக்க வெப்பநிலைக் கட்டுப்பாட்டு முறைமை காப்பு உபாயம் மேலதிகமான சூடேற்படுவதனைத் தடுக்குங்கருவி உயர்வரையறைப் பாதுகாப்பு ரிலே மொத்த உள்ளீடு (கிவோ) 1.17 பரிமாணம் அகலம் 3,250, நீளம் 1,270, உயரம் 2,100 ரிமார்க்ஸ் தனிக்கட்டம் 200 வோட், புளோவர் 200 வோட், எரிகருவி 200 வோட் ; சொல்லப்பட்ட எந்திரத்தொகுதியும் சாதனமும் கேகால்லை, நாகொல்ல வீதியிலுள்ள 124 ஆம் இலக்க ஸ்தானத்தில் வைக்கப்படும்.

பணிப்பாளர்/பொதுமுகாமையாளர்,
தேசிய அபிவிருத்தி வங்கி லிமிட்டெட்.

12-807/3

---

## வரையறுக்கப்பட்ட செலான் வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல. : 0450 - 01673513 - 001 - (எம்பிலிப்பிட்டிய கிளை)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபையினால் 30.10.2006 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"எம்பிலிப்பிட்டியவைச் சேர்ந்த ரவீந்திர சமரவீர என்பவர் 'கடனெடுத்தவர்' என்ற வகையில் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு இஸட். பாலிக் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, ஏப்பிறல் 22 ஆந் தேதிய 378 ஆம் இலக்க மற்றும் 2005, யூன் 3 ஆந் தேதிய 385 ஆம் இலக்க முறிகளின்மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால், இப்பொழுது 2006, மே 31 ஆந் தேதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின்மீது முப்பது இலட்சத்து அறுபத்தாறாயிரத்து நூற்றெண்பது ரூபா தொண்ணூற்றிரண்டு சதம் (ரூபா 30,66,180.92) வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 30,66,180.92 பணத்தொகையையும் 2006 யூன் 1 ஆந் தேதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு முப்பத்து மூன்று சதவீதப்படி (33%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக சொல்லப்பட்ட 378 மற்றும் 385 ஆம் இலக்க முறிகளினால் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விபரிக்கப்படுவதுமான ஆதனமும் வளவும் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட

ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

ஊவா மாகாணத்தின், பதுளை மாவட்டம், உடகிந்த பிரிவில் உடபலாத்த கோறளேயில் நுகத்தலாவில் அமைந்துள்ள, "வேமுல்ல எஸ்ரேட்" என்றழைக்கப்படும் காணி தொடர்பில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. விக்கிரமசிங்கவால் தயாரிக்கப்பட்ட 2001.09.27 ஆந் தேதிய 4085 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டுகள் 1, 2, 3, 4, 5 மற்றும் 6 எனக் குறிக்கப்பட்ட ஆறு அடுத்துள்ள இக்காணிப் பங்கீடுகள் முழுவதும். சொல்லப்பட்ட அடுத்துள்ள காணிப்பங்கீடுகள் எல்லாவற்றினதும் எலலைகள் - வடக்கில் : வெலிமட குறூப்பின் காணி (தேயிலை), டிரைஸ்டார் அப்பறல் கம்பனியால் உரிமைகோரப்படும் காணி மற்றும் வீதி ; கிழக்கில் : சானக சமரவீரவின் தோட்டம் மற்றும் ரீ ஷக்தி தொழிற்சாலை வளவு ; தெற்கில் : ரீ ஷக்தி தொழிற்சாலை வளவு, நுவரெலியாவிலிருந்து வெலிமடைக்கான பிரதான வீதி, தர்மதாச சமரவீரவின் தோட்டம் மற்றும் இந்திர தசநாயக்கவின் தோட்டம் ; மேற்கில் : தர்மதாச சமரவீரவின் தோட்டம் மற்றும் இந்திர தசநாயக்கவினதும் பிறரினதும் தோட்டம். சொல்லப்பட்ட 4085 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஏழு ஏக்கர் முப்பது தசம் எட்டு பேர்ச்சஸ் (7ஏ.0றூ.30.8பே.) விஸ்தீரணமுள்ளது. இது பதுளை காணிப்பதிவகத்தில் தொகுதி / பக்கம் C563/ 170 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது ஊவா மாகாணத்தின், பதுளை மாவட்டம், வெலிமட பிரதேச செயலாளர் பிரிவின் உடபலாத்த கோறளேயில் நுகத்தலாவ கிராமத்தில் அமைந்துள்ளதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. விக்கிரமசிங்கவால் தயாரிக்கப்பட்ட 2005.03.02 ஆந் தேதிய 4519 ஆம் இலக்க மீள் அளவீட்டு வரைபடத்தில் துண்டு இல. 1 எனக் குறிக்கப்பட்டுள்ளதுமாகும். இதன் எல்லைகள் - வடக்கில் : வெலிமட குறூப் ; கிழக்கில் : டிரைஸ்டார் அப்பறல் கம்பனியால் உரிமைகோரப்படும் காணியும் அதே காணியின் பகுதியும் ; தெற்கில் : அதே காணியின் பகுதி, துண்டு 2 மற்றும் தர்மதாச சமரவிக்கிரமவும் ஷாந்த அமரக்கோனும் உரிமைகோருகின்ற காணிகள் ; மேற்கில் : இந்திர தசநாயக்கவும் பிறரும் உரிமைகோருகின்ற காணி. இரண்டு ஏக்கர் முப்பத்தைந்து பேர்ச்சஸ் (2ஏ.0றூ.35பே.) விஸ்தீரணமுள்ள இதன்கண் அமைந்துள்ள ஏனைய எல்லாவற்றுடனும். இது பதுளை காணிப்பதிவகத்தில் தொகுதி / பக்கம் C563/ 268 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

***வழிஉரிமை:***

ஊவா மாகாணத்தின், பதுளை மாவட்டம், வெலிமட பிரதேச செயலாளர் பிரிவின் உடபலாத்த கோறளேயில் நுகத்தலாவ கிராமத்தில் அமைந்துள்ளதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. விக்கிரமசிங்கவால் தயாரிக்கப்பட்ட 2005.03.02 ஆந் தேதிய 4519 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு இல. 2 எனக் காட்டப்பட்டதும் வேமுல்ல எஸ்ரேட் என்றழைக்கப்படுவதுமான ஒரு காணிப் பங்கீடு அதன் கண் அமைந்துள்ள ஏனைய எல்லாவற்றுடனும். இதன் எல்லைகள் : வடக்கில் : துண்டு இல. 1 ; கிழக்கில் : அதே காணியின் பகுதி ; தெற்கில்: பிரதான வீதி ; மேற்கில் : தர்மதாச சமரவீர மற்றும் பிறர் உரிமைகோருகின்ற காணி. பதினைந்து தசம் எட்டு பேர்ச்சஸ் (0ஏ.0றூ.15.8பே.) விஸ்தீரணமுள்ளது. இது பதுளை காணிப் பதிவகத்தில் தொகுதி / பக்கம் C563/ 269 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
பிரதிப் பொதுமுகாமையாளர்-சட்டம்.

12-831/ 1

---

**வரையறுக்கப்பட்ட செலான் வங்கி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல. : 0450-04507380- 001 (எம்பிலிபிட்டிய கிளை)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2006.10.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"துங்கமவைச் சேர்ந்த பொஹொன்வெவ தூரகே பியதாச என்பவர் 'கடனெடுத்தவர்' என்ற வகையில் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு எஸ். ஈ. வீரரத்ன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1998, மே 19 ஆந் திகதிய 8287 ஆம் இலக்க முறியின்மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது 2006, மே 31 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிமீது ஏழு இலட்சத்து இருபத்தெண்ணாயிரத்து முந்நூற்று முப்பத்தைந்து ரூபா இருபத்தொரு சதம் (ரூபா 7,28,335.21) வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு உரியதாகச் செலுத்தப்படவேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 7,28,335.21 பணத்தொகையையும் 2006, யூன் 01 ஆந் தேதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு முப்பத்து மூன்று சதவீதப்படி (33%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 8287 ஆம் இலக்க முறியினால் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனமும் வளவும் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தால் உரித்தாக் கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது".

**மேலே குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தில், கொலொன்ன கோறளையின் தியபொட்டகம் பத்துவில் ஹிங்குர கிராமத்தில் அமைந்துள்ளதும் நிலஅளவையாளர் நாயகத்தின் உரித்து வரைபடம் இல. S. 38916 இல் துண்டு 578 எனக் காட்டப்பட்டதும் பஹலவெவஹேன என்றழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான பிரித்து வரையறுக்கப்பட்ட காணி. இதன் எல்லைகள் - வடக்கு: துண்டு 685 1/2 மற்றும் துண்டு 573 ; கிழக்கு : துண்டு 576 ; தெற்கு : துண்டு 584 மற்றும் துண்டு 685 1/2 ; மேற்கு : துண்டு 685 1/2 மற்றும் 579. மூன்று ஏக்கர் மூன்று றூட் முப்பத்தைந்து பேர்ச்சஸ் (3ஏ. 3றூ. 35பே.) விஸ்தீரணமுள்ள சொல்லப்பட்ட காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்ட ஒரு பகுதியும் பிரசித்த நொத்தாரிசு எஸ். ஈ. வீரரத்னவால் உறுதிப்படுத்தப்பட்ட 1982.03.30 ஆந் திகதிய 1938 ஆம் இலக்க உறுதியில் குறிப்பிடப்பட்டதும் பின்னர் அளக்கப்பட்டு

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஜீ. தர்மரத்னவால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1998.04.25 ஆந் திகதிய 1151 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள், தோப்பு மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து சொல்லப்பட்ட காணிப்பகுதியின் எல்லைகள் – வடக்கு : துண்டு 573 ; கிழக்கு : துண்டு 576 மற்றும் அதே காணியின் எஞ்சிய பகுதி (பீ. டி. நிஷாந்தவால் உரிமைகோரப்படும் காணி) ; தெற்கு ; அதே காணியின் எஞ்சிய பகுதி (பீ. டி. நிஷாந்தவால் உரிமைகோரப்படும் காணி) ; மேற்கு : அதே காணியின் எஞ்சிய பகுதி (எஸ். ஈ. சோமதாசவால் உரிமைகோரப்படும் காணி). இது இரண்டு றூட் பதினைந்து தசம் ஐந்து ஆறு பேர்ச்சஸ் (0ஏ. 2றூ. 15.56பே.) விஸ்தீரணமுள்ளது. (இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் தொகுதி / பக்கம் ஜி46/ 122, ஜி 80/ 123, ஜி175/ 144 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது).

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்).

12–831/ 2

---

### வரையறுக்கப்பட்ட செலான் வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல. : 0350 – 1000485 – 001 – (யக்கல கிளை)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபையினால் 30.10.2006 ஆந் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"கல்கிசையைச் சேர்ந்த சனத் ஏக்கநாயக்க மானவடு என்பவர் 'கடனெடுத்தவர்' என்ற வகையில் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு எஸ். சீ. ரணவீர என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட1994, செத்தெம்பர் 7 ஆந் திகதிய 1130 ஆம் இலக்க, 1995 யூன் 28 ஆந் திகதிய 1575 ஆம் இலக்க, 1995 யூலை 28 ஆந் திகதிய 1636 ஆம் இலக்க மற்றும் 1998 நவெம்பர் 23 ஆந் திகதிய 3591 ஆம் இலக்க முறிகளின்மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால், இப்பொழுது 2002 மார்ச் 27 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின் மீது எழுபத்தொரு இலட்சத்து எண்பத்தையாயிரத்து நானூற்றி ஐம்பத்தைந்து ரூபா ஐம்பத்தொரு சதம் (ரூ. 71,85,455.51) வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளதாதலாலும் ;

சொல்லப்பட்ட சனத் ஏக்கநாயக்க மானவடு 2002 ஒகத்து 4 ஆந் திகதியன்று அல்லது அதற்குக் கிட்டிய தேதியில் இறந்ததன் பேரில் அவரின் ஆதனம் கல்கிசை மாவட்ட நீதிமன்ற 1841/03/T இலக்க வழக்கின் மூலம் நிருவகிக்கப்பட்டுத் திருமதி வெல்லகே ஸ்ரீமதி பத்ம ரஞ்சனி மானவடு அதன் உரிமைத் தத்துவகாரராக நியமக்கப்பட்டுள்ளதாதலாலும் சொல்லப்பட்ட ரூபா 71,85,455.51 பணத்தொகையையும் 2002 மார்ச் 28 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்துமூன்று சதவீதப்படி (33%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 1130, 1575, 1636 மற்றும் 3591 ஆம் இலக்க முறிகளினால் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனமும் வளவும் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

#### முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், சியானே கோறளேயின் மெதபத்துவில், அளுத்கமவில் யக்கலையில், அமைந்துள்ள வெரல்லவத்த, வெலிபில்லேவ என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. செனெவிரத்னவால் தயாரிக்கப்பட்ட 1984/11/26 ஆந் திகதிய 4006 ஆம் இலக்க நிலஅளவை வரைபடத்தில் துண்டு 5 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும். இதன் எல்லைகள் – வடக்கு : PP771 இல் துண்டு 2909 ; கிழக்கு : துண்டுகள் 2 மற்றும் R1 ; தெற்கு : துண்டு 6 ; மேற்கு : மற்றும் வடமேற்கு : PP 771 இல் துண்டு 2909. சொல்லப்பட்ட 4006 ஆம் இலக்க வரைபடத்தின்படி இருபத்தாறு தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 26.5பே.) விஸ்தீரணமுள்ளது. இது கம்பஹா காணிப் பதிவகத்தில் E276/221 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலே சொல்லப்பட்ட 4006 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டுகள் R1, R7, R24 மற்றும் R4 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டவற்றின் மீது வழி உரிமை கொண்டதாக.

2. மேலே சொல்லப்பட்ட அளுத்கமவில், யக்கலையில், அமைந்துள்ள வெரல்லவத்த, வெலிபில்லேவ என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 4006 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 6 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும். இதன் எல்லைகள் – வடக்கு : துண்டு 5 ; கிழக்கு : துண்டு R1 ; தெற்கு : துண்டு R4 ; மேற்கு : துண்டு W1, சொல்லப்பட்ட 4006 ஆம் இலக்க வரைபடத்தின்படி பத்தொன்பது தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 19.5பே.) விஸ்தீரணமுள்ளது. இது கம்பஹா காணிப் பதிவகத்தில் E276/222 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலே சொல்லப்பட்ட 4006 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டுகள் R1, R7, R24 மற்றும் R4 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டவற்றின் மீது வழி உரிமை கொண்டதாக.

#### இரண்டாவது அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிட்டி கோறளேயின் பள்ளே பத்துவில் தெகிவளை– கல்கிசை மாநகர சபை எல்லைகளினுள் அத்திடிய, டெம்பிளேர்ஸ் வீதியில் அமைந்துள்ள தவட்டகஹகும்புர மற்றும் மினும்பெருவே கும்புற என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. ஜி. எம். பீ. பர்னாந்துவால் தயாரிக்கப்பட்ட 1982.03.23 ஆந் திகதிய

845 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு A9 எனக் குறிக்கப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும். அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும் சேர்த்து. இதன் எல்லைகள் - வடக்கு : துண்டு A2 ; கிழக்கு : துண்டுகள் A1, A10 மற்றும் A20 ; தெற்கு : துண்டு A21 ; மேற்கு : மெஸர்ஸ் மஸ்கன்ஸ் லிமிடெட்டின் ஆதனம். முப்பத்தைந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 35பே.) விஸ்தீரணமுள்ளது. இது கல்கிசை காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் M1342/206 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கீழே விவரிக்கப்பட்ட வீதி ஒதுக்கத்தின் ஊடாகவும் மேலாகவும் வழி உரிமை கொண்டதாக :-

மேலே சொல்லப்பட்ட அத்திடிய, டெம்பிளேர்ஸ் வீதியில் அமைந்துள்ள தவட்டகஹகும்புர மற்றும் மினும்பெருவே கும்புற என்றழைக்கப்படும் காணி தொடர்பில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. ஜி. எம். பீ. பர்னாந்துவால் தயாரிக்கப்பட்ட 1982.03.23 ஆந் திகதிய 845 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு A1 எனக் குறிக்கப்பட்ட (20 அடி அகல வீதி ஒதுக்கம்) முழுவதும். சொல்லப்பட்ட துண்டு A1 எல்லைகள் - வடக்கு : துண்டுகள் A2, A3, A4, A7. A8 மற்றும் திரு. மாணிக்கத்தின் ரதகே கும்புற ; கிழக்கு : திரு. மாணிக்கத்தின் ரதகே கும்புற ; தெற்கு : A10, A11, A12, A13, A14 மற்றும் A15 ; மேற்கு : துண்டுகள் A9 மற்றும் A15. சொல்லப்பட்ட 845 ஆம் இலக்க வரைபடத்தின்படி முப்பது தசம் ஏழு இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 30.72பே.) விஸ்தீரணமுள்ளது. இது கல்கிசை காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் M1342/204 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம்.

12-831/3

---

## வரையறுக்கப்பட்ட செலான் வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 0170-587149-001 (கண்டி கிளை)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2006.10.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"களுத்துறையில் இல. N (PVS) 15449 இன் கீழ் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியான டெஷானி டிரெஸ் பொயின்ற் (பிரை) லிமிட்டெட் 'கடனெடுத்தவர்' என்ற வகையில் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு எம். பரம்சோதி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2000.08.17 ஆந் திகதிய 483 ஆம் இலக்க மற்றும் 2003 ஒற்றோபர் 2 ஆந் திகதிய 1230 ஆம் இலக்க முறிகளின்மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது 2006, ஓகத்து 7 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின்மீது ஒரு கோடியே முப்பத்தைந்து இலட்சத்து தொண்ணூற்றெட்டாயிரத்து தொண்ணூற்றி ஐந்து ரூபா எண்பத்தொன்பது சதம் (ரூபா 1,35,98,095.89) வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு உரியதாகச் செலுத்தப்படவேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 1,35,98,095.89 பணத்தொகையையும் 2006, ஓகத்து 08 ஆந் தேதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு முப்பத்து மூன்று சதவீதப்படி (33%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 483 மற்றும் 1230 ஆம் இலக்க முறிகளினால் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனமும் வளவும் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது".

### அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் இப்போது கண்டி மாநகர சபை எல்லைகளினுள் யட்டிநுவரவின் கங்கவத்த கோறளேயில் முன்னர் கிரிகரி வீதியான ரஜபிஹில்ல மாவத்தையில் அமைந்துள்ளதும் (இல. 81, ரஜபிஹில்ல மாவத்தை, கண்டி என்ற வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட காணியினதும் வளவினதும் பகுதியாயுள்ள) இல. 185ஏ ரஜபிஹில்ல மாவத்தை என்ற வரிமதிப்பீட்டிலக்கத்தை இப்போது கொண்டுள்ளதும் கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. டி. ஆதிஹெட்டியால் தயாரிக்கப்பட்ட 1995 ஒற்றோபர் 25 ஆந் திகதிய 1938 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான பிரித்து வரையறுக்கப்பட்ட காணியினதும் வளவினதும் பகுதி அதன்கண் அமைந்துள்ள வீடு, மரங்கள், தோப்புகள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைகள் - வடக்கு : நீரோடை ; கிழக்கு ; இல. 187, ரஜபிஹில்ல மாவத்த என்ற வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் யு. பாலமகும்புறவால் தயாரிக்கப்பட்ட வரைபடம் இல. 464 B இல் துண்டு 2 ஏ ; தெற்கு : அதே வரைபடத்தில் துண்டு 2 ; மேற்கு : தனியார் பாதை மற்றும் ஒதுக்கம், பத்து பேர்ச்சஸ் (0ஏ.0றூ.10பே.) விஸ்தீரணமுள்ள இது கண்டி மாவட்டக் காணிப்பதிவகத்தில் தொகுதி/ பக்கம் ஏ273/246 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில், இப்போது கண்டி மாநகர சபை எல்லைகளினுள் யட்டிநுவரவின் கணவத்த கோறளையில் முன்னர் கிரகரி வீதி இப்போது ரஜபிஹில்ல மாவத்த, அம்பிட்டிய வட்டார இல. 14, இல் அமைந்துள்ளதும் (வரைபடம் இல. 464B இல் தனியார் வீதியுடனான ஒதுக்கமாகக் காட்டப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். ஜே. சமரசிங்கவால் தயாரிக்கப்பட்ட 1992.09.18 ஆந் திகதிய வரைபடம் இல. 20 இல் துண்டு 1 இன் பகுதியான றொக்வில்லா அல்லது றொக் ஹவுஸ் மற்றும் வளவின் பிரிக்கப்பட்ட பகுதியாயுள்ள) கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற

நிலஅளவையாளர் யு. பாலமகும்புறவால் தயாரிக்கப்பட்ட 1998 மே 28 ஆந் திகதிய 3634 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான பிரித்து வரையறுக்கப்பட்ட காணிப்பகுதி முழுவதும் அதன்கண் அமைந்துள்ள ஏனைய எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைகள் - வடக்கு : அதே காணியின் பகுதி வரைபடம் இல. 464B இல் துண்டு 2B ; கிழக்கு : துண்டு 2 ; தெற்கு : தனியார் வீதி ; மேற்கு : எல. ஒன்று தசம் ஒன்று இரண்டு ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 1.125பே.) விஸ்தீரணமுள்ளது. இது கண்டி மாவட்டக் காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஏ 295/225 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்).

12-831/4

---

### வரையறுக்கப்பட்ட செலான் வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 0170-112870-001 (கண்டி கிளை)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2006.11.24 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"கண்டியைச் சேர்ந்த சரத் பந்துலசிறி த மெல் என்பவர் 'கடனெடுத்தவர்' என்ற வகையில் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு ஏ. பீ. யு. கெப்பெட்டிபொல என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1996, நவெம்பர் 13 ஆந் திகதிய 11551 ஆம் இலக்க முறியின்மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால், இப்பொழுது 2003, திசெம்பர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறியின்மீது மூன்று இலட்சத்து பதினோராயிரத்து ஐந்நூற்று முப்பத்தைந்து ரூபா இருபத்தொன்பது சதம் (ரூ. 3,11,535.29) வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு உரியதாகச் செலுத்தப்படவேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட மூன்று இலட்சத்து பதினோராயிரத்து ஐந்நூற்று முப்பத்தைந்து ரூபா இருபத்தொன்பது சதம் (ரூ. 3,11,535.29) பணத்தொகையையும் 2004.01.01 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு இருபத்தாறு சதவீதப்படி (26%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 11551 ஆம் இலக்க முறியினால் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதார் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டும் என வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது".

#### அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில், யட்டிநுவரவின் கங்கபலாத்த கோறளேயில் கிரிபத்கும்புரவில் அமைந்துள்ள (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. டி. ஆதிஹெட்டியால் தயாரிக்கப்பட்ட 1989.10.08 ஆந் திகதிய 1234 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 42 இன் ஒரு பகுதியாகவும் அத்துடன் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. யட்டவரவால் தயாரிக்கப்பட்ட 1968.02.01 ஆந் திகதிய 830 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட காணியின் ஒரு பகுதியாகவுமுள்ள) 'போர்ன் புறோக் எஸ்டேட்' என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறைக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. டி. ஆதிஹெட்டியால் தயாரிக்கப்பட்ட 1991.10.15 ஆந் தேதிய 1469 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 72 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், தோப்புகள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட வரைபடத்தின்படி சொல்லப்பட்ட துண்டு 72 இன் எல்லைகள்- வடக்கு : நெல் வயல் ; கிழக்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு 72B ; தெற்கு : வரைபடம் இல. 2770 இல் துண்டு இல. 5 ; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு 71. இருபத்தைந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 25பே.) விஸ்தீரணமுள்ள இது கண்டி காணிப்பதிவகத்தில் பக்கம் B339/219 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2. அதனுடன் பொதுவான வழி உரிமையும் பின்வரும் காணிகள் மேலாகவும் ஊடாகவும் வழி உரிமையும் கொண்டதாக :-

(அ) மேலே சொல்லப்பட்ட கிரிபத்கும்புரவில் அமைந்துள்ள போர்ன் புறோக் எஸ்டேட்டிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் சொல்லப்பட்ட வரைபடம் இல. 1469 இல் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான துண்டு 73 இன்மீது எல்லா வழியுரிமையும். சொல்லப்பட்ட வரைபடத்தின்படி இதன் எல்லைகள்- வடக்கு : நெல் வயல் ; கிழக்கு : துண்டு 72A ; தெற்கு : துண்டுகள் 71, 70, 69, 68, 67 மற்றும் 66 ; மேற்கு : துண்டு 41 அணுகல் வழி. இருபத்தொன்று தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 21.5பே.) விஸ்தீரணமுள்ள இது கண்டி காணிப்பதிவகத்தில் பக்கம் B 339/25 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

(ஆ) கிரிபத்கும்புரவில் அமைந்துள்ளதும் மேலே சொல்லப்பட்ட வரைபடம் இல. 1234 இல் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்ட துண்டு 41 இன் மீது எல்லா வழி உரிமையும். சொல்லப்பட்ட துண்டு 41 இன் எல்லைகள்- வடக்கு : துண்டுகள் 37, 22, 21, 20, 19, 18, 17, 16, 15, 14, 13 மற்றும் 11 ; கிழக்கு : வரைபடம் இல. 1197A இல் துண்டு 1, துண்டுகள் 22, 23, 24, 25 மற்றும் 28 ; தெற்கு : வரைபடம் இல. 1197A இல் துண்டு 2 ; மேற்கு : துண்டுகள் 42, 10, 39, 38 மற்றும் 37. ஒரு றூட் ஆறு பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 6பே.) விஸ்தீரணமுள்ள இது கண்டி காணிப்பதிவகத்தில் பக்கம் B 335/203 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

(இ) மேலே சொல்லப்பட்ட கிரிபத்கும்புரவில் அமைந்துள்ள பியோபொலேகொடஹேன, நெல்லிகஸ்கொட மற்றும் ரணுந்தெனிய கும்புரவிலிருந்து பிரித்துக் குறிக்கப்பட்ட துண்டுகள் 1, 2, 4 மற்றும் 3 இன் மீதான முழு வரி உரிமையும். இதன் எல்லைகள்- வடகிழக்கு :

வீதி; கிழக்கு : குருதலை கும்புர, வரைபடம் இல. 1197 இல் துண்டு 2 மற்றும் களுபண்டாவின் காணி ; தென்கிழக்கு : களுபண்டாவின் காணி ; தென்மேற்கு : வரைபடம் இல. 1234 இல் துண்டு 41 ; மேற்கு : வரைபடம் இல. 1197 இல் துண்டு 1, நெல்லிகஸ்கொட இடம். இருபத்திமூன்று தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 23.5பே.) விஸ்தீரணமுள்ளது. இது கண்டி காணிப்பதிவகத்தில் பக்கம் B330/ 39 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்).

12-831/ 5

---

**மக்கள் வங்கி - பமுனுகம கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க (திருத்தச்) சட்டப்படி 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் எடுக்கப்பட்ட தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க (திருத்தச்) சட்டப்படி 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் வரும் தீர்மானம் பணிப்பாளர் சபையினரால் அவர்களின் 30.08.2002 ஆந் திகதி நடந்த கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறியத்தருகிறேன் :-

"ஆகையினால் கொலம்பகே ஜூஸே ஜோன் கென்னடி பெரேரா என்பவர் மக்கள் வங்கிக்காக, கம்பஹா பிரசித்த நொத்தாரிசு பீ. என். ஏக்கநாயக்காவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2628 ஆம் இலக்கத்தையும் 2000.06.13 ஆந் திகதியுமுடையதுமான, கடன் முறிக்குரிய கொடுப்பனவைச் செலுத்தத் தவறியதால் இப்பொழுது குறிப்பிடப்பட்ட மூன்று இலட்சத்து பத்தொன்பதாயிரத்து நாநூற்றி முப்பத்தி மூன்று ரூபா இருபது சதமும் (ரூ. 3,19,433.20), ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா (ரூ. 1,50,000) மக்கள் வங்கிக்கு குறிப்பிடப்பட்ட முறியின் பேரில் கொடுபடவேண்டியுள்ளது. 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் (திருத்தச்) சட்டப்படி 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க சட்டப்படி, மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபைக்கு உரிமை வழங்கியுள்ள அதிகாரத்திற்கு இணங்க 2628 ஆம் இலக்கக் கடன் முறியின் கீழ் மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள சொத்தும் வீடும் குறிக்கப்பட்ட மூன்று இலட்சத்து பத்தொன்பதாயிரத்து நாநூற்றி முப்பத்தி மூன்று ரூபா இருபது சதத்தையும் (ரூ. 3,19,433.20), ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவையும் (ரூ. 1,50,000) மீட்டெடுப்பதற்காக கம்பஹா அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர் டீ. எம். எஸ். பீரிஸ் என்பவரால் பொது ஏலத்தில் விற்கப்படுவதற்கு தீர்மானம் செய்யப்பட்டுள்ளது. மேலும் மூன்று இலட்சத்து பத்தொன்பதாயிரத்து நாநூற்றி முப்பத்தி மூன்று ரூபா இருபது சதத்துக்கும் (ரூ. 3,19,433.20), 2001.08.17 ஆந் திகதி முதல் வருடத்துக்கு 26.5 வீதம், விற்பனை திகதி வரை வட்டியுடனும், ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவும் (ரூ. 1,50,000), 2002.05.30 ஆந் திகதி முதல் வருடத்துக்கு 26.5 வீதம், விற்பனை திகதி வரை வட்டியுடனும் விற்பனை செலவும் குறைக்கப்பட்டு மீதி (ஏதும் இருப்பின்) கட்டணம் கிடைத்த பின்பு."

**ஈடுவைக்கப்பட்டுள்ள சொத்துக்களின் விவரணம்**

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், அழுத்குரு கோரளை, ராகம பத்துவில், தாராகுளிய கிராமத்தில் அமைந்துள்ள 'முத்துராஜவெள எஸ்டேட்' எனும் பெயருடைய காணியை அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் கே. ஈ. ஜே. பி. பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 5404 ஆம் இலக்கமும் 1998.04.10 ஆந் திகதியுமுடைய வரைபடத்தில் 'A' ஆம் இலக்கக் காணித்துண்டென பிரிக்கப்பட்டு வேறாக்கப்பட்டுள்ள தொகுதிக்கு எல்லைகள் - வடக்கில் : பிரதான பாதையாலும் ; கிழக்கில் : ஸீ. பீட்டர் பெரேரா உரிமை கோரும் இதே காணியின் மீதமுள்ள பகுதியாலும் ; தெற்கில் : பொஸ்டர் சில்வா உரிமை கோரும் காணியாலும் ; மேற்கில் : பாதையாலும் (பிரத்தியேக) சூழ்ந்த இருபது தசம் மூன்று ஆறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 20.36பே.) விஸ்தீரணமுள்ள காணியும், அத்துடன் மண்ணோடு சேர்த்து மரங்கள், பயிர்கள், கட்டிடங்களும். மேலும் அக்காணியில் இருக்கும் அனைத்தும் அடங்கிய ஆதனத்தை நீர்கொழும்பு காணிப் பதிவு அலுவலகத்தில் B144/100 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
கம்பஹா.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
1/40, பௌத்தாலோக மாவத்தை,
கம்பஹா.

12-844

---

**மக்கள் வங்கி - செங்கடகல கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் தீர்மானங்கள்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் தீர்மானங்கள் 2006.10.20 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

"கண்டி பிரசித்த நொத்தாரிசு திருமதி அஜந்தா குமாரி விஜேரத்ன அவர்களால் அத்தாட்சிப்படுத்திய 2005.04.25 ஆந் திகதிய 4687 ஆம் இலக்கங் கொண்ட ஈட்டுமுறியின் பிரகாரம் ராமசாமி பாலகிருஷ்ணன் ஜெகநாதன் கௌதீஸ்வரி ஆகியவர்கள் ஈட்டு முறியில் தவணை தவறியுள்ளதால், கூறப்பட்ட ஈட்டுமுறியின் கீழ் தற்போது இரண்டு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து நாநூற்றி தொண்ணூற்றி ஒன்பது ரூபா தொண்ணூற்றி ஒன்பது சதமும் (ரூ. 2,37,499,99) ஆன தொகைப் பணத்தை மக்கள் வங்கிக்கு அறவீடு செய்து கொள்ள வேண்டியுள்ளதால், 2006.02.02 ஆந் திகதி

தொடக்கம் வருடாந்தம் 19.25 வீதம் இரண்டு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து நாநூற்றி தொண்ணூற்றி ஒன்பது ரூபா தொண்ணூற்றி ஒன்பது சதமும் (ரூ. 2,37,499,99) ஆன தொகைப் பணத்திற்காக ஏலவிற்பனை தினம் வரை மேலும் வட்டியும் அதற்குரிய மக்கள் வங்கி சட்டத்தின் 29எல் (29 L) பிரிவின் கீழ் அறவீடு செய்து கொள்ள வேண்டிய பணமும் கட்டணமும் உட்பட பின்பு எவையேனும் கொடுப்பனவுகள் பெற்றிருப்பின், அதைக் கழித்து கூறப்பட்ட இரண்டு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து நாநூற்றி தொண்ணூற்றி ஒன்பது ரூபா தொண்ணூற்றி ஒன்பது சதம் (ரூ. 2,37,499,99) ஆன தொகைப் பணத்தை அறவீடு செய்து கொள்வதற்காக கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஷொக்மன் மற்றும் சமரவிக்ரம அவர்களால் கூறப்பட்ட 4687 ஆம் இலக்கங்கொண்ட ஈட்டு முறியின் கீழ் கூறப்பட்ட வங்கிக்கு அடகு வைத்திருக்கும் ஆதனமும் நிலமும் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் தமக்குரித்தாக்கப்பட்ட தத்தவங்களின் பிரகாரம் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானிக்கின்றது."

### அடகு வைத்திருக்கும் ஆதனங்கள் பற்றிய விவரணம்

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், யடிநுவர கங்கவட்ட கோரளே கண்டி மாநகர சபை எல்லைக்குள், மாபனாவதுரயில் அமைந்துள்ள கரவ்காஹேன என்றழைக்கப்படும் காணிக்கு 1977 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதி உத்தரவுபெற்ற அளவையாளரான டப்.கே.எச்.எம்.வெலிவிட்ட அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 760 ஆம் இலக்கங்கொண்ட மூல வரைவு படத்தின் பிரகாரம் 12 ஆம் லொட் இலக்கங்கொண்ட பகுதி காணி. இருபது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 20பே.) அறுவடைக்கு கூறப்பட்ட மூல வரைவு படத்தின் பிரகாரம் எல்லைகள் - வடக்கு : 760 ஆம இலக்கங்கொண்ட மூல வரைவு படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நுழையும் பாதையும் ஓடையும் ; கிழக்கு : ஓடையும் ; தெற்கு : நகர சபை பாதையும் ; மேற்கு : லொட் இலக்கம் 11 உம் ஆகிய இவ்வாறு எல்லைகளில் அமைந்துள்ள காணிக்கு (இக்காணி கண்டி காணி பதிவு செய்யும் அலுவலகத்தில் ஏ 341/39 ஆம் இலக்கங் கொண்ட பதிவேட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது) உத்தரவுபெற்ற நிலஅளவையாளரான சி. டீ. ஆதிஹெட்டி அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 3092ஏ இலக்கங்கொண்ட 1998.12.30 ஆந் திகதிய மூல வரைவு படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கரவ்காஹேன என்றழைக்கப்படும் இருபது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 20பே.) விசாலமுள்ள காணியும் கூறப்பட்ட மூல வரைவு படத்தின் பிரகாரம் எல்லைகள் - வடக்கு : கூறப்பட்ட மூலவரைவு படத்தின் லொட் இல. 10 உம் ; கிழக்கு : கூறப்பட்ட மூல வரைவு படத்தின் ஓடையும் ; தெற்கு : நகர சபை பாதையும் ; மேற்கு : கூறப்பட்ட மூல வரைவு படத்தின் லொட் இல. 11 உம் ; வடமேற்கில் : நுழைவு பாதையும் ஆகிய எல்லைகளில் அமைந்துள்ள காணியும் அதற்குள்ளே அமைந்துள்ள கட்டிடங்களும், மரங்கள், இலைகள், பழங்கள் ஆகிய சகலவைகளும் உட்படும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
கண்டி.

மக்கள் வங்கி,
மத்திய வலய அலுவலகம்,
இல. 17, தலதா வீதி,
கண்டி.

12-845

### ருஹுணு அபிவிருத்தி வங்கி - யக்கலமுல்ல

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடனை அறவிட்டுக் கொள்ளும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ருஹுணு அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையினால் சம்மதிக்கப்பட்டதொரு ஆலோசனையாகும்

1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் கீழும் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினாலும் வெளியிடப்பட்ட 1998.04.24 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய அமைக்கப்பட்டுள்ள ருஹுணு அபிவிருத்தி வங்கிக்குச் சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், 2006.02.20 ஆந் திகதி நடாத்தப்பட்ட ருஹுணு அபிவிருத்தி வங்கி பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள ஆலோசனை ஏகமனதாகச் சம்மதிக்கப்பட்டுள்ளது :-

"ருஹுணு அபிவிருத்தி வங்கியின் பெயரில் சட்டத்தரணியும் பிரசித்திபெற்ற நொத்தாரிசுமான திருமதி பீ. கே. மிகுன்தென்ன என்பவரால உறுதிப்படுத்தப்பட்ட 2002.01.04 ஆந் திகதியும் 4232 ஆம் இலக்க ஈட்டுமுறியின் கீழ் வரவேண்டிய நிதி செலுத்துதல், காலி, கராகொட, "மஹேந்திர" இல் வசிக்கும் திலகசிறி ஜயவிக்ரம என்பவரால் கைவிடப்பட்டுள்ளதாலும் அவ்வீட்டு முறியின் கீழ் ஒரு இலட்சத்து முப்பத்தியிரண்டாயிரத்து இருநூற்று ஐம்பது ரூபா (ரூ. 2,32,250) நிதி ருஹுணு அபிவிருத்தி வங்கிக்குச் செலுத்த் வேண்டியுள்ளதாலும், 2005.05.06 ஆந் திகதி முதல் வருடத்திற்கு 24% ஆக, ஒரு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து இருநூற்றி ஐம்பது ரூபா (ரூ. 2,32,250) நிதிக்காக ஏலவிற்பனை திகதிவரை தொடர்ந்து வட்டியும் ஏலவிற்பனை செலவுகளும், அத்துடன் ஏதாவதொரு தொகை மீளக் கிடைத்திருப்பின் அதனைக் குறைத்துக் கொண்டு மீதிப் பணத்தினை அறவிட்டுக் கொள்வதற்காக மாத்தறை அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர் திரு. ஜீ. பீ. ஆனந்த என்பவரால் 4232 ஆம் இலக்க ஈட்டுமுறியின் கீழ் ஈடாக வைக்கப்பட்டிருக்கும் ஆதனங்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டுமென்று அவ்வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானிக்கின்றது."

### ஈடாக வைக்கப்பட்டுள்ள ஆதனங்கள் பற்றிய விவரணம்

தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், தல்பெ பத்துவயில் யடமலகலயிலமைந்துள்ள மோதரவலகனத்த அல்லது முலனஅத்தர கனத்த எனும் வடக்கே : பின்னகும்புற அல்லது முதலிவலயும் ஆரம்ப வரைபட இல. 13ஏ துண்டும், 4589 ஆம் இலக்கமும் ; கிழக்கே : 190083 ஆம் இலக்க வரைபடத்தின் 198039 ஆம் இலக்கமும் லொகுகமகே முலனயும் ; தெற்கே : லொகுகமகே முலனயும் ; மேற்கே : மோதரவல அல்லது லொகுகமகே முலனயும் எல்லைகளாக அமைந்த இரண்டு ஏக்கர் இருபது பேர்ச்சஸ் (2ஏ. 0றூ. 20பே.) விசாலமுடைய காணியின் அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் திரு. கே. கன்னன்கர என்பவரால் 1995.07.27 ஆந் திகதி அளந்து அமைக்கப்பட்ட வரைபடத்தின் 483/1995 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் மேலே கூறப்பட்டுள்ள யடமலகலயிலமைந்துள்ள, முலனஅத்தர கனத்த அல்லது மோதரவிலஹேன பிரித்து வேறாக்கப்பட்ட ஏ எழுத்துடைய துண்டின் வடக்கே : முதில்லவில, லொட் Y-589 உம் ; கிழக்கே : ரீ. பீ. 198029 ஆம் இலக்க லொகு கமகே முலனயும் ; தெற்கே : லொகுகமகே முலனயும் ; மேற்கே : லொகுகமகே முலன, முதில்லவில, ரீ. பீ. 194989 ஆம் இலக்க காணியும் எல்லைகளாக அமைந்த இரண்டு ஏக்கரும் இருபது பேர்ச்சஸ் (2ஏ. 0றூ. 20பே.) விசாலமுடைய

காணியின் மரம், செடி, பயிர்ச்செய்கை உட்பட்ட நிலம் பூரணமாக வாகும்.

இவ் ஆதனம் D844/190 ந. 35/227 இன் கீழ் 2002.01.04 ஆந் திகதி காலி காணிகள் பதிவு செய்யும் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

முகாமையாளர்,
டீ. ஜீ. விமலரத்ன,

ருஹுணஅபிவிருத்தி வங்கி,
தலைமை அலுவலகம்,
பம்புரண, மாத்தறை.
2006.02.16.

12-860

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

2001.10.03இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது -

"இலங்கை வங்கி அயகமக் கிளை முகாமையாளர் அத்தாட்சிப்படுத்திய 1998.06.30 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. V/08/1998 இன் பேரில் "விஜித", மாலிகாவத்தை, பஹல கலதுர, கிரிஎல்ல என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. விதான கமகே புன்யசிறி ஜயவிக்ரம என்பவரிடமிருந்து முதலும் 2001.01.23 வரை வட்டியும் நான்கு இலட்சத்து ஐம்பத்தையாயிரத்து தொளாயிரத்து ஒரு ரூபா அறுபத்திமூன்று சதம் (ரூ. 4,55,901.63) அத்துடன் மூன்று இலட்சத்து ஏழாயிரத்து இருநூறு ரூபா (ரூ. 3,07,200) ஆண்டுக்கு 28% வீதத்தில் 2001.05.24 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. மேற்குறிப்பிட்ட முறி, இல. V/08/1998 இன் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட நான்கு இலட்சத்து ஐம்பத்தையாயிரத்து தொளாயிரத்து ஒரு ரூபா அறுபத்திமூன்று சதம் (ரூ. 4,55,901.63) அத்துடன் 2001.05.24 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 24, ரொறிங்டன் றோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரமவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்குமமைய இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

### ஆதனம்/வாகனத்தின் விவரணம்

| வாகனப் பதிவு இல. | விபரம் தயாரிப்பு/ மொடெல் பரிவலு ஆகியன | செசி இல. | என்ஜின் இல. |
|---|---|---|---|
| 251-6154 | டொயட்டா | CR 27 0083452 | 2C-2667164 |

ஏ. சந்ரபால,
கிளை முகாமையாளர்.

இலங்கை வங்கி,
அயகம கிளை.

12-896

---

## ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட்

*1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிட்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் பணிப்பாளர்கள் சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(ஹட்டன் கிளை) - சின்னையா செல்வராஜு

ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் பணிப்பாளர்கள் சபையால் 2006 திசெம்பர் 07 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

சின்னையா செல்வராஜு என்பவர் கடப்பாடுடையவராக, ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் சார்பில் கம்பளை பிரசித்த நொத்தாரிசு எல். டபிள்யு. பர்ணாந்து என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1992 செத்தெம்பர் 26ஆந் திகதிய மற்றும் 1994 மே 30 ஆந் திகதிய முறையே 3149 மற்றும் 3533 ஆம் இலக்க இருமுறிகள் மீதும் அத்துடன் கம்பளை பிரசித்த நொத்தாரிசு ரி. பி. அபேக்கோன் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1996 யூலை 06 ஆந் திகதிய, 2000 பெப்புருவரி 02 ஆந் திகதிய மற்றும் 2001 யூன் 06 ஆந் திகதிய முறையே 1842, 3084 மற்றும் 3400 ஆம் இலக்க எல்லா முறிகள் மீதும் வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும், அத்துடன் 2005 திசெம்பர் 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறிகள் மீது ஓர் இலட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து எண்ணூற்றெண்பத்து நாலு ரூபா நாற்பத்தொரு சதம் (ரூ. 148,884.41) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாதலாலும் அத்துடன் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணைகளில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 3149,3533,1842,3084 மற்றும் 3400 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் தாபனத்துக்கு ஈடுவைக்கப் பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூ. 148,884.41 பணத்தொகையை 2006 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள் வரை அதன் மீதான மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றுடனும் சேர்த்து (பெறப்பட்ட

கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காகக் கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனைகாரர் என். எச். பி. எவ். ஆரியரத்ன என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கிறது."

### அட்டவணை

மத்திய மாகாணம, கண்டி இறைவரி மாவட்டம் மற்றும் கம்பளை பதிவு மாவட்டத்தினுள் உடபலாத்தவின் கங்கா பஹல கோறளையில் றத்மல்கடுவ என்னுமிடத்தில் அமைந்துள்ளதும், சிங்கப்பிட்டிய எஸ்டேட் என அழைக்கப்படுவதுமான காணியின் பாகமொன்றாக இருப்பதும் உரிமம் பெற்ற நில அளவையாளர் எல். எஸ். டி. சில்வா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1947 செத்தெம்பர் 11 ஆந் திகதிய 803 B என்னும் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 1 (சொல்லப்பட்ட வரைபடத்தில், சொல்லப்பட்ட நில அளவையாளர் டி. ஏ. ஜயகொட என்பவரால் 1985 சனவரி 26 ஆந் திகதியன்று செய்யப்பட்ட உபபிரிவொன்றாகும்) இலிருந்து உரிமம்பெற்ற நில அளவையாளர் டி. ஏ. ஜயகொட என்பவரால் தயாரிக்கப்பட்ட 1991 யூலை 14 ஆந் திகதிய 3030 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதுமான அப்பிரிக்கப்பட்ட காணி முழுவதும். அத்துடன் சொல்லப்பட்ட 3030 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள அப்பிரிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் வடகிழக்கு: சொல்லப்பட்ட 803 B என்னும் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள சிங்கப்பிட்டிய எஸ்டேட்டின் எஞ்சிய பாகம், கிழக்கு: கம்பளையிலிருந்து மேல்சிங்கப்பிட்டிய செல்லும் கிராம சபை வீதி, தென்கிழக்கு: சிங்கப்பிட்டிய எஸ்டேட்டின் எஞ்சிய பாகம், வடமேற்கு: 803 B என்னும் இலக்க சொல்லப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள சிங்கப்பிட்டிய எஸ்டேட்டின் எஞ்சியபாகம், அத்துடன் கம்பளை காணிப்பதிவகத்தில் C 124/265 இல் பதிவு செய்யப்பட்டதும் இருபது பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி அதிலுள்ள பயிர்வகைகள் மற்றுமெல்லாவற்றுடனும் சேர்த்து.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்) / சபைச் செயலாளர்

12-907/1

---

## ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட்

1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் பணிப்பாளர்கள் சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(ஹோமகம கிளை) - சந்திரிகா தலகல

ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் பணிப்பாளர்கள் சபையால் 2006 திசெம்பர் 07 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"சந்திரிகா தலகல என்பவர் கடப்பாடுடையவராக, ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கே. சேனாநாயக்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004 ஒற்றோபர் 12ஆந் திகதிய 1254 ஆம் இலக்க முறி மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும், அத்துடன் 2006 பெப்புருவரி 28 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறி மீது ஒரு இலட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து எழுநூற்றுப் பன்னிரண்டு ரூபா அறுபத்தாறு சதம் (ரூ. 179,712.66) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாதலாலும் அத்துடன் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணைகளில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 1254 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூ. (ரூ. 179,712.66) பணத்தொகையை 2006 மார்ச் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள் வரை அதன் மீதான மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றுடனும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காகக் கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனைகாரர் ஆர். எஸ். மஹாநாம என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கிறது."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு அம்பத்தலென் பஹல அளுத்குறு கோறளை தெற்கில் கொலன்னாவை நகர சபை எல்லைகளுக்குள் மீத்தொட்டமுல்ல என்னுமிடத்தில் அமைந்துள்ளதும், தேவால வீதி, 7 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைத் தற்போது கொண்டதும் "கொங்கஹவத்தை" என அழைக்கப்படுவதுமான காணியிலிருந்து உரிமம் பெற்ற நில அளவையாளர் பி. ஏ. கே. ஜே. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1996 பெப்புருவரி 29 ஆந் திகதிய 1045 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு 1C என அடையாளமிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதிலுள்ள கட்டிடங்கள் மற்றெல்லாவற்றுடனும் சேர்த்து. அத்துடன் அச்சொல்லப்பட்ட காணித்துண்டு 1C இன் எல்லைகள் வடக்கு: காணித்துண்டு 1A; கிழக்கு: காணித்துண்டு 1D மற்றும் காணித்துண்டு 1F, தெற்கு: தேவால வீதி அத்துடன் மேற்கு: காணித்துண்டு 1B அத்துடன் கொழும்பு காணிப் பதிவகத்தில் B 830/191 என்னும் தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் சொல்லப்பட்ட 1045 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் நாலு தசம் மூன்று சைபர் பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 4.30பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கே. சேனாநாயக்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, ஒற்றோபர் 12 ஆந் திகதிய 1254 ஆம் இலக்க ஈட்டுமுறியின் இரண்டாம் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட பாதையுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்) / சபைச் செயலாளர்

12-907/2

## ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட்

*1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் பணிப்பாளர்கள் சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

*கண்டி கிளை - மஹாவத்தகே டொன் சுனில் ஜயவர்தன மற்றும் தர்மரத்ன முதியான்சேலாகே தமயந்திகுமாரி தர்மரத்ன*

*ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் பணிப்பாளர்கள் சபையால் 2006 திசெம்பர் 07 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது:-*

*"மஹாவத்தகே டொன் சுனில் ஜயவர்தன மற்றும் தர்மரத்ன முதியான்சலாகே தமயந்தி குமாரி தர்மரத்ன என்போர் கடப்பாடுடையவர்களாக, ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எச். எம். எம். எச். கே. ஹேரத் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2000 செத்தெம்பர் 29 ஆந் திகதிய 51 ஆம் இலக்க முறிமீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும், அத்துடன் 2006 சனவரி 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறி மீது ஓர் இலட்சத்து எண்பத்தேழாயிரத்து இருபத்தெட்டு ரூபா மூன்று சதம் (ரூ. 1,87,028.03) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாதலாலும் அத்துடன் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணைகளில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 51 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூ. (ரூ. 1,87.028.03) பணத்தொகையை 2006 பெப்புருவரி 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள் வரை அதன் மீதான மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றுடனும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காகக் கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனைகாரர் பி. கே. இ. சேனாதிபதி என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கிறது."*

### அட்டவணை

*இலங்கைக் குடியரசின் மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் குலுகம்மன சியப்பற்று ஹரிஸ்பத்துவவில் பறிகம கிராமத்தில் அமைந்துள்ளதும் கண்டியின் உரிமம்பெற்ற நில அளவையாளர் பெர்னாட் பி. ரூபசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 1993 ஒற்றோபர் 31 ஆந் திகதிய 1162 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 43 எனக்காட்டப்பட்டுள்ளதுமான ஹெட்டியாவத்தை மறுபெயர் நிச்குறோவ் இன் அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பாகம் முழுவதும். அத்துடன் அச்சொல்லப்பட்ட காணித்துண்டு இல. 43 இன் எல்லைகள் வடக்கு: சொல்லப்பட்ட வரைபடத்திலுள்ள காணித்துண்டு 42, கிழக்கு: வீதியாக இருக்கும் காணித்துண்டு 37 வீதிக்கான ஒதுக்குகை, மேற்கு: யகலத்தென்ன எஸ்டேட்டைப் பிரிக்கும் எல்லை, அத்துடன் இருபத்து மூன்று தசம் மூன்று ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 23.35பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி, காணித்துண்டுகள் 19, 37 மற்றும் 38 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டுகள் மீதான பாதையுரிமையுடன் சேர்த்து அத்துடன் சொல்லப்பட்ட வரைபடத்தில் காணித்துண்டு 50 என அடையாளமிடப்பட்டுள்ள கிணற்றிலிருந்து நீரெடுக்கும் உரிமையுடனும் சேர்த்து.*

*பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,*

*இந்திராணி குணசேகர,*
*பி. பொ. மு. (சட்டம்) /சபைச் செயலாளர்*

*12-907/ 3*

---

## ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட்

*1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் பணிப்பாளர்கள் சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

*(பதுளை கிளை) - மெனிக் ஹிட்டிஹாமி முதியான்சேலாகே நிஷந்த கித்துள்வத்தை*

*ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் பணிப்பாளர்கள் சபையால் 2006 திசெம்பர் 07 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது.*

*"மெனிக் ஹிட்டிஹாமி முதியான்சேலாகே நிஷந்த கித்துள்வத்தை என்பவர் கடப்பாடுடையவராக, ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எச். ராஜபக்ஷ என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005 ஓகத்து 26 ஆந் திகதிய 180 ஆம் இலக்க முறிமீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும், அத்துடன் 2006 ஏப்பிரல் 17 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறி மீது பன்னிரண்டு இலட்சத்து முப்பத்தையாயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தொரு ரூபா பதினாறு சதம் (ரூ. 12,35,951.16) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாதலாலும் அத்துடன் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணைகளில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 180 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிடெட் தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூ. (ரூ. 12,35,951.16) பணத்தொகையை 2006 ஏப்ரல் 18 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள் வரை அதன் மீதான மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றுடனும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காகக் கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனைகாரர் என். எச். பி. எவ். ஆரியரத்ன என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கிறது."*

### அட்டவணை

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், யட்டிகிந்த பிரிவில் ஓயாபலத்த கோறளையில் அக்குறுகடுவ கிராமத்தில் அமைந்துள்ளதும் "அமித்தில்லன்கட்டுவ" யாய என அழைக்கப்படுவதுமான காணியிலிருந்து உரிமம்பெற்ற நில அளவையாளர் பி. டபிள்யு. நந்தசேன என்பவரால் தயாரிக்கப்பட்ட (மிகச்சரியாக) 2003 யூன் 1 ஆந் திகதிய 4485 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு 1 என அடையாளமிடப்பட்டது மான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்ககப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதிலுள்ள கட்டிடம் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. அத்துடன் அச்சொல்லப்பட்ட காணித்துண்டு 1 இன் எல்லைகள் வடக்கு: எகொடவத்தை கந்துற மற்றும் றோசலின் என்பவரின் காணிகள், கிழக்கு: இதே காணியின் எஞ்சிய பாகம், தெற்கு: வீதி அத்துடன் மேற்கு: பிரதேச செயலக அலுவலகம், பிரதேச சபை மற்றும் றோசலின் என்பவரின் காணிகள் அத்துடன் பதுளை மாவட்டக் காணிப்பதிவகத்தில் B 322/ 253 இல் பதிவு செய்யப்பட்டதும் சொல்லப்பட்ட 4485 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் ஒரு ஏக்கர், இரண்டு றூட்டுகள் (1ஏ. 2 றூ. 0பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி, உரிமம்பெற்ற நில அளவையாளர் பி. டபிள்யு. நந்தசேன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2002, யூன் 01 ஆந் திகதிய 4485 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள பாதையுரிமையுடன் சேர்த்து.

### இரண்டாம் அட்டவணை

மேலே முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட முதலாம் அட்டவணையில் உள்ள சொல்லப்பட்ட காணித்துண்டிலுள்ள கட்டிடங்கள் சம்பந்தமாக இதன்பின்னர் காலத்துக்குக்காலம் செய்யப்படும் எல்லா மற்றும் ஒவ்வொரு ஒப்பந்தங்களை மற்றும் காப்பீட்டு ஒப்பந்தம் என்பனவற்றின் கீழ் மீள் பெறப்படக்கூடிய எல்லாப் பணத்தொகைகளும்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்) /சபைச் செயலாளர்

12-907/4

---

## ஹட்டன்ட நஷனல் வங்கி லிமிட்டெட்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹட்டன்ட நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(பதுளை கிளை) - தேவனன் ஹலாகே சனத் தர்மசேன

ஹட்டன்ட நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் 2006, திசெம்பர் 7 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"தேவனன் ஹலாகே சனத் தர்மசேன" என்பவர் கடப்பாடுடையவராக ஹட்டன்ட நஷனல் வங்கி லிமிட்டெட் சார்பில் பதுளை பிரசித்த நொத்தாரிசு ஐ. எம். பி. ஆனந்த என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003, சனவரி 22 ஆந் திகதி 9418 ஆம் இலக்க முறிமீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளராதலாலும், 2006 மே 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறிமீது ஐந்து இலட்சத்து அறுபத்திரண்டாயிரத்து எந்நூற்றி ஒன்பது ரூபா இருபத்திரண்டு சதம் (ரூ. 5,62,809.22) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாதலாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட எற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணைகளில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 9418 ஆம் இலக்க முறிமூலம் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும், சொல்லப்பட்ட ரூ. 5,62,809.22 பணத்தொகையை, 2006, யூன் 1 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம் பெற்ற ஏலவிற்பனைகாரர் என். எச். பி. எவ். ஆரியரத்ன என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### முதலாம் அட்டவணை

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், உடுகிந்த பிரிவில் உடபலாத்த கோறளையில் கொறந்தியெல்ல கிராமத்தில் அமைந்துள்ளதும் "அன்னீஸ் லாண்ட்" என அழைக்கப்டுவதுமான காணியின் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. எஸ். எஸ். பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 25.05.1998 ஆந் திகதிய 3787 ஆம் இலக்க வரைபடத்தில் காடடப்பட்டுள்ளதும் காணித்துண்டு 11 என அடையாளமிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். அத்துடன் அச்சொல்லப்பட்ட காணித்துண்டு 11 இன் எல்லைகள் - வடகிழக்கு : காணித்துண்டு 7 மற்றும் அரச காணி ; தென்கிழக்கு : அரச காணி ; தென்மேற்கு : காணித்துண்டு 17 மற்றும் காணித்தண்டு 12 (4.00 மீ. வீதிக்கான ஒதுக்குகை) ; வடமேற்கு : காணித்தண்டு 13 (6.70 மீ. வீதிக்கான ஒதுக்குகை) அத்துடன் பதுளை மாவட்ட காணிப் பதிவகத்தில் சி543/215 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதும், சொல்லப்பட்ட 3787 ஆம இலக்க வபைடத்தின் பிரகாரம் பதினாலு தசம் ஐந்து சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 14.50பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி அதிலுள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து.

சொல்லப்பட்ட 3787 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டுகள் இல. 12 மற்றும் 13 என அடையாளமிடப்பட்டுள்ள அணுகு வீதிகளைச் சுதந்திரமாகப் பாவிக்கும் உரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்) /சபைச் செயலாளர்

12-907/5

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

*திருவாளர்கள் ராணி குரூப் கம்பனிகளின் பங்குதாரர்கள் திரு. நெவில் கிறிஸ்தோபர் பெர்னாண்டோ (தந்தை), திருமதி விக்ரமசிங்ஹ ஆரச்சிகே ராணி மரில்டா (திரு. பெர்னாண்டோவின் துணை), திரு. ஜொஹான் இந்திக பெர்னாண்டோ மற்றும் திரு. ரொஷான் தம்மிக பெர்னாண்டோ (இரு புத்திரர்கள்)*

*(நீர்கொழும்பு, அத்துகல, இல. 133/1ஐ சேர்ந்த திருவாளர்கள் ராணி குரூப் கம்பனிகள் மற்றும் கொச்சிக்கடை, பலகதுறை, போருதொட்ட றோட், இல. 144 ஐச் சேர்ந்த திரு. நெவில் கிறிஸ்தோபர் பெர்னாண்டோ மற்றும் திருமதி விக்ரமசிங்ஹ ஆரச்சிகே ராணி மரில்டா ஆகியோரின் கடன் பொறுப்புகளுக்காக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். ஐ. பெர்னாண்டோ தயாரித்த 1987.04.03 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 2277 இல் விபரித்த மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பதிவுப் பிரிவுகளுள் அலுத்குரு கோரளை துனகஹபற்றுவில் பலகதுறை மேற்கில் அமைந்த தொம்பகஹவத்த என அழைக்கப்படும் காணியின் துண்டு இல.13 மற்றும் 13ஏ என விபரித்து ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.)*

2006, நவெம்பர் 9 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கி பணிப்பாளர்கள் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது :-

"1. 1.1 கடன் வசதி 1.- பிரசித்த நொத்தாரிசு ஜி. சி. பி. திலக்கரத்ன அத்தாட்சிப்படுத்திய 2004.02.11 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 2392 இன் பேரில் இல. 133/1, அத்துகல, நீர்கொழும்பு என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் ராணி குரூப் கம்பனிகளிடமிருந்து முதலும் 2006.09.30 வரை கடன் மீது தீர்க்காதிருக்கும் வட்டியும் அறுபத்திமூன்று இலட்சத்து பதின்மூவாயிரத்து எழுநூற்றி இருபத்தொரு ரூபா ஐம்பத்திரண்டு சதம் (ரூ. 63,13,721.52) அத்துடன் ஐம்பத்தொரு இலட்சம் ரூபா (ரூ. 51,00,000) ஆண்டுக்கு பதினாறு வீதத்தில் (16%) 2006.10.01 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாதலும்,

1.2 கடன் வசதி 2.-பிரசித்த நொத்தாரிசு ஜி. சி. பி. திலக்கரத்ன அத்தாட்சிப்படுத்திய 1999.08.19 ஆந் திகதியிட்ட இல. 1016 மற்றும் 1998.02.20 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி 468 ஆகியவற்றின் பேரிலும் பிரசித்த நொத்தாரிசு ஜி. தி. அல்விஸ் அத்தாட்சிபபடுத்திய 2005.02.25 ஆந் திகதியிட்ட இல. 2165 இன் பேரிலும் இல. 133/1, அத்துகல, நீர்கொழும்பு என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் ராணி குரூப் கம்பனிகளிடமிருந்து முதலும் 2006.09.30 வரை கடன் மீது தீர்க்கப்படாதிருக்கும் வட்டியும் தொண்ணூற்றி ஏழு இலட்சத்து ஐம்பத்துநான்காயிரத்து எழுநூற்றி இருபத்தொரு ரூபா எழுபத்தாறு சதம் (ரூ. 97,54,721.76) அத்துடன் எழுபத்தைந்து இலட்சம் ரூபா (ரூ. 75,00,000) ஆண்டுக்கு பதினாறு வீதத்தில் (16%) 2006.10.01 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாதலும்,

1.3 கடன் வசதி 3.-பிரசித்த நொத்தாரிசு ஜி. சி. பி. திலக்கரத்ன அத்தாட்சிப்படுத்திய 2002.12.27 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1953 இன் பேரில் இல. 144, போருதொட்ட றோட், பலகதுறை, கொச்சிக்கடை என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. நெவில் கிறிஸ்தோபர் பெர்னாண்டோ மற்றும் திருமதி விக்ரமசிங்ஹ ஆரச்சிகே ராணி மரில்டா ஆகியோரிடமிருந்து முதலும் 2006.09.30 வரை கடன் மீது தீர்க்கப்படாதிருக்கும் வட்டியும் நாற்பத்திரண்டு இலட்சத்து எண்பத்தாறாயிரத்து எந்நூற்றி நாற்பத்தொன்பது ரூபா அறுபத்தைந்து சதம் (ரூ. 42,86,849.65) அத்துடன் முப்பத்தைந்து இலட்சத்து தொண்ணூற்றொன்பதாயிரத்து தொளாயிரத்து நாற்பத்தைந்து ரூபா (ரூ. 35,99,945) ஆண்டுக்கு பதினாறு வீதத்தில் (16%) 2006.10.01 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாதலும்,

1.4 கடன் வசதி 4.-பிரசித்த நொத்தாரிசு ஜி. சி. பி. திலக்கரத்ன அத்தாட்சிப்படுத்திய 2002.12.27 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1953 இன் பேரில் இல. 144, போருதொட்ட றோட், பலகதுறை, கொச்சிக்கடை என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. நெவில் கிறிஸ்தோபர் பெர்னாண்டோ மற்றும் திருமதி விக்ரமசிங்ஹ ஆரச்சிகே ராணி மரில்டா ஆகியோரிடமிருந்து முதலும் 2006.09.30 வரை நிரந்தர மேலதிகப் பற்று மீது தீர்க்கப்படாதிருக்கும் வட்டியும் பன்னிரண்டு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து தொளாயிரத்து அறுபத்தாறு ரூபா நாற்பத்தாறு சதம் (ரூ. 12,87,966.46) அத்துடன் பதினொரு இலட்சத்து ஆயிரத்து முந்நூற்றி முப்பத்திநான்கு ரூபா நாற்பத்தாறு சதம் (ரூ. 11,01,334.46) ஆண்டுக்கு பதினாறு தசம் ஐந்து வீதத்தில் (16.5%) 2006.10.01 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வங்கிக்கு வருமதியாக உள்ளதாதலும்,

2. 2.1 மேற்குறிப்பிட்ட முறி இல. 2392 இன் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட முறிஇல. 2392 இன் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட அறுபத்திமூன்று இலட்சத்து பதின்மூவாயிரத்து எழுநூற்றி இருபத்தொரு ரூபா ஐம்பத்திரண்டு சதம் (ரூ. 63,13,721.52) அத்துடன் 2006.10.01 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும்,

2.2 மேற்குறிப்பிட்ட முறி இல. 2165, 468 மற்றும் 1016 ஆகியவற்றின் பேரில் வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட தொண்ணூற்றி ஏழு இலட்சத்து ஐம்பத்துநான்காயிரத்து எழுநூற்றி இருபத்தொரு ரூபா எழுபத்தாறு சதம் (ரூ. 97,54,721.76) அத்துடன் 2006.10.01 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்ட வட்டியும்,

2.3 மேற்குறிப்பிட்ட முறி இல. 1953 இன் பேரில் வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட நாற்பத்திரண்டு இலட்சத்து எண்பத்தாறாயிரத்து எந்நூற்றி நாற்பத்தொன்பது ரூபா அறுபத்தைந்து சதம் (ரூ. 42,86,849.65) அத்துடன் 2006.10.01 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும்,

2.4 மேற்குறிப்பிட்ட முறி இல. 1953 இன் பேரில் வருமதியாகத உள்ள மேற்குறிப்பிட்ட பன்னிரண்டு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து தொளாயிரத்து அறுபத்தாறு ரூபா நாற்பத்தாறு சதம் (ரூ. 12,87,966.46) அத்துடன் 2006.10.01 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்ததும் இலங்கை வங்கிக்கு ஈடுவைத்ததுமான சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 474, மஹாநாம டிரைவ், பிட்டகோட்டை, கோட்டை என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் ஆர். எஸ். எம். ஏலத்தினருக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமையவும்,

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பிரதான முகாமையாளருக்கும் (அறவிடல் கிளைகள்) இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், நீர்கொழும்பு பதிவுப் பிரிவுள் கம்பஹா மாவட்டத்தில் அலுத்குரு கோரளை துனகஹபற்றுவில் பலகதுறை மேற்கில் அமைந்த தொம்பகஹவத்த என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். ஐ. பெர்னாண்டோ தயாரித்த 1987.04.03 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 2277 இல விபரித்த துண்டு 13 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில்: இக் காணியின் பாகமும் ; கிழக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2277 இல் துண்டு 12 உம் ; தெற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2277 இல் விபரித்த துண்டு 13A உம் ; மேற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2277 இல் துண்டு 14 உம் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் பத்து தசம் ஏழு பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 10.7பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள பயிர்களும் அத்துடன் வரைபடம் இல. 1926 இல் துண்டு 7 என அடையாளமிட்ட 20 அடி அகல ஒதுக்கப்பட்ட பாதையை உபயோகிப்பதற்கான உரிமையும் அத்துடன் மேற்குறிப்பிட்ட காணித்துண்டுகளுக்கும் காணித்துண்டுகளிலிருந்தும் பிரவேசிப்பதற்கு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2277 இல் விபரித்த கிழக்குக்கு 20 அடி அகலமும் பதினைந்து அடி அகலமும் பிரவேசப் பாதையை உபயோகிப்பதற்கான உரிமையும் ஆகும். இது நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் ஈ 889/177 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட பலகதுறை மேற்கில் அமைந்த தொம்பகஹவத்த என அழைக்கப்படும் காணி மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2277 இல் விபரித்த துண்டு 13A என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2277 இல் விபரித்த துண்டு 13 உம் ; கிழக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2277 இல் விபரித்த துண்டு 12A உம் ; தெற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2277 இல் 20 அடி அகல பிரவேசப் பாதை துண்டு 7 உம் ; மேற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2277 இல் துண்டு 14A உம் எல்லைகளாகக் கொண்டு ஒன்பது தசம் மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 9.3பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் அத்துடன் வரைபடம் இல. 1926 இல் துண்டு 7 என அடையாளமிட்ட 20 அடி அகல ஒதுக்கப்பட்ட பாதையை உபயோகிப்பதற்கான உரிமையும் அத்துடன் மேற்குறிப்பிட்ட காணித்துண்டுகளுக்கும் காணித்துண்டுகளிலிருந்தும் கிழக்குக்கு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2277 இல் விபரித்த 20 அடி அகல மற்றும் 15 அடி அகல பாதையை உபயோகிப்பதற்கான உரிமையும் ஆகும். இது நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் ஈ 889/178 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் சபை கட்டளைப்படி,

ஆர். நல்லையா,
பிரதான முகாமையாளர்,
(அறவிடல் - கிளைகள்).

இலங்கை வங்கி,
அறவிடல் கிளைகள்,
இல. 4, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 01.
2006, நவெம்பர் 13.

12-909